*9*

# தேவனுடைய ஞானம் தெரிய வந்தது

## (3:8-13)

*3:1-7 ல், பவுல் தனது தனிநபர் ஊழியத்தைக் குறித்து புறஜாதிகளிடத்தில் பேசினார். இந்த சிந்தனையைத் தொடர்ந்து 3:8-13ல், தேவனுடைய ஞானம் எப்படித் தெரிய வந்தது என்று சொல்லுகிறார்.*

## புறஜாதிகளுக்கு பிரசங்கிக்க ஏதுவாக்கும் கிருபை *(3:8)*

**8பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**

*வசனம் 8. பவுல் தன்னை* **பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவன் என்று குறிப்பிட்டபோது** *அவர் ஒரு தவறான தாழ்மையை வெளிப்படுத்தவில்லை. உண்மையிலேயே அவர் தன்னைப் பற்றி இவ்வாறே உணர்ந்தார். 1 தீமோத்தேயு 1:12-17ல், இரட்சிக்கப்பட்டு பாவமன்னிப்படைந்த பவுல் தேவனைத் துதித்து தனக்குக் காண்பிக்கப்பட்ட இரக்கம், கிருபை, மற்றும் அன்பு, ஆகியன பிரதான பாவியான தனக்குக் கிடைத்ததற்காக இயேசு கிறிஸ்துவுக்கு நன்றியைத் தெரிவிக்கிறார். அவர் (பவுல்) தூஷிக்கிறவராகவும், துன்பப்படுத்துகிறவராகவும், வன்முறைக்கும் வம்புச்சண்டைக்கும் போகிறவராக முன்பு இருந்தார். அவிசுவாசத்தின் அறியாமையினால், அவர் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் எதிர்த்து நின்றார். தேவன் தமது பூரணப்பட்ட பொறுமையை தன்னிடத்தில் காட்டி தனது ஆத்துமாவை இரட்சிப்பதிலும் தன்னை ஒரு முன் மாதிரியாக வைப்பதிலும் அவர் கிரியை செய்தார் என்று அவர் (பவுல்) விசுவாசித்தார். அவரே இரட்சிக்கப்பட்டிருக்கக் கூடுமானால் வேறு யாரும் இரட்சிக்கப்படக்கூடும்! (இந்த) அப்போஸ்தலன் தன்னை "எல்லா பரிசுத்தவான்களுக்கும் கீழானவனாகவும்" பின்பு "அகாலப் பிறவியாகவும்" "அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாகவும்" சிந்தித்துக் கொண்டார் (1 கொரிந்தியர் 15:8, 9). கூடுதலாக, அவர் தான் "ஒன்றுமில்லை" என்றார் (2 கொரிந்தியர் 12:11). தேவனுடைய கிருபையால் அவர் "யாரோ ஒருவராகி" அப்போஸ்தல ஊழியம் கொடுக்கப்பட்டார் (காண்க 3:2, 7).*

*தேவனுடைய கிருபையால் தான் பவுல் "புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனானார்" (ரோமர் 11:13), அவர்களுக்கு அவர்*

**கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப்** பிரசங்கித்தார். "ஐஸ்வரியம்" (*ploutos*) என்பது பாவங்களை மன்னிக்கிறதிலும் இருக்கிற அவருடைய கிருபையை உள்ளடக்கியது (1:7), தேவன் தமது பரிசுத்தவான்களுக்கென வைத்திருக்கிற மகிமையின் சுதந்தரத்தையும் (1:18), "வருங்காலங்களில்" காட்டப்படும் கிருபையும் (2:7), தேவனுடைய மகிமையும் (3:16), மற்றும் இந்த வசனத்தில், கிறிஸ்துவையும் உட்படுத்திப் பேசப்படுகிறது. இங்கே குறிப்பிடப்படுகிற காரியம், "கிறிஸ்து தாமே சுவிசேஷ ஐசுவரியத்தின் நிறைவை உண்டாக்கி, இருக்கிறார், அதனால் வரும் இரட்சிப்பின் ஆஸ்தி அளவற்றதாய் காணப்படும்படி செய்தார்."[1] "அளவற்ற" என்பது *anexichniastos,* ("ஆராய்ந்து கண்டுபிடிக்க முடியாதது")[2] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவைக்குறித்த ஐசுவரியமிக்க சத்தியத்தின் நிறைவையும் அவர் கொண்டு வந்த இரட்சிப்பையும் ஜனங்களால் புரிந்து கொள்ள இயலாது. அது ஆராய்ந்து அறியமுடியாதது அல்லது மனுக்குலத்தால் முழுமையாய் பற்றிக் கொள்ள இயலாதது; கிறிஸ்துவுக்குள் தேவனுடைய திட்டம் புரிந்து கொள்ள மிகவும் ஆழமான ஒன்று. ரோமர் 11:33ல் பவுல் வியப்புடன் "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அறியப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" என்றார்.

## தேவனுடைய அனந்த ஞானம் தெரிய வருதலுக்கான நோக்கம் (3:10)

**[10]உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய (தேவனுடைய) அனந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,**

**வசனம் 10.** புறஜாதிகளுக்கு தேவனுடைய நோக்கத்தை அறிவிக்கும் பொறுப்பு பவுலுக்குக் கொடுக்கப்பட்டது. ஆகிலும், *இந்த வசனப் பகுதியில் முழு சபையுமே அந்த நோக்கத்தைத் தெரியப்படுத்தும் ஊழியப் பொறுப்பைப் பெற்றிருப்பதாக பவுல் அறிவித்தார்.* பவுலின் இலக்கு "புறஜாதிகளுக்குப் பிரசங்கிப்பதுதான்" (3:8) மற்றும் "தேவனுடைய இரகசியத்தை எல்லாருக்கும் காண்பிப்பது" (3:11), **அவருடைய அனந்த ஞானமானது இப்பொழுது சபையின்மூலம் தெரியவரவேண்டும்.** "அனந்தம்" என்பது கிரேக்க குணப் பெயர்ச் சொல்லாகிய *polupoikilos,* என்பதன் மொழிபெயர்ப்பு, அது புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது, மேலும் வழக்கமாக துணிகளில் காணப்படும் நிறங்களின் வண்ணம், மற்றும் பூக்கள் அல்லது வண்ணப்பூச்சிகளின் வண்ணம் போன்றவற்றின் தன்மையை யோசனையாகக் கூறுகிறது.[3] "தேவனுடைய ஞானம்" - அதாவது பவுல் விவாதித்துக் கொண்டிருக்கிற தேவனுடைய திட்டம் - தேவன் தமது இரகசியத்தை வெளியரங்கமாக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக முழு வெளிப்படுத்தும் வளமையான பலவகை வழிகளை முன்வைக்கிறார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இந்த விஷயங்களை எதிர்கால மறைபொருளாகப் பேசினர், இவைகளை உற்று நோக்க தேவதூதர்களும் ஆசையாய் இருந்தார்கள்;

*தேவன் தாமாக முழுமையாய் வெளிப்படுத்தும் வரை மனிதனோ தேவதூதனோ புரிந்து கொள்ள இயலவில்லை (காண்க 1 பேதுரு 1:10-12). பவுல் இப்பொழுது வெளியாக்கப்பட்டுள்ள, தேவனுடைய அந்த ஞானத்தை வலியுறுத்தி, அது பல வகையிலும் வளமிக்கதும் மகிமையாக நியமனமாயிருக்கிறது என்றார்.*

*"இப்பொழுது," இந்த நிகழ்காலத்தில் (கிறிஸ்தவ யுகத்தில்), சபை தேவனுடைய திட்டத்தை தெரியப்படுத்த வேண்டும். "சபை" என்ற இந்த வார்த்தை இந்த நிருபத்தில் இரண்டாவதாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது, முழு நிருபமும் சபையைக் குறித்து பேசினாலும் கூட இது இரண்டாவது பயன்பாடு (1:22, 23 ன் வியாக்கியான உரையைக் காண்க). சபைதான்* **உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்** *தேவனுடைய ஞானத்தை, அல்லது திட்டத்தை, தெரியப் பண்ண வேண்டும். "உன்னதங்களிலுள்ள இந்த துரைத்தனங்களும் அதிகாரங்களும்" என்பது யார் என்று பவுல் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை அல்லது அவர்களுக்கு சபையானது தேவனுடைய ஞானத்தை எப்படித் தெரியவரும் பொருட்டு செயல்படக் கூடும் என்று சொல்ல வில்லை. (மேலும் கற்றுக் கொள்ள: இந்தப் புத்தகத்தின் பின்பகுதியில், [3:10] ன் "அதிகாரங்களும் துரைத்தனங்களும்" குறித்துக் காண்க.)*

## வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்ட தேவனுடைய இரகசியம் கிருபை (3:11)

**[11]இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாக காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**

**வசனம் 11.** *பவுலின் கூற்றுப்படி, தேவனுடைய கிருபையால் அவருக்குள் கொடுக்கப்பட்ட சிலாக்கியமும் பணியும் மறைக்கப்பட்டிருந்த இரகசியத்திட்டத்தை விளக்கப்படுத்துவதும் ஒரு பகுதி.* **காண்பிக்கும் பொருட்டு** *என்பது நேரடி மொழிபெயர்ப்பு ஃபோட்டிஸோ என்பதிலிருந்து வந்தது. இதன் தெளிவான பொருள் தேவனுடைய கிருபை கிறிஸ்துவாகிய நபரையும் அவரது பணியையும் பவுல் பிரசங்கிக்க ஏதுவான அறிவையூட்டி, தேவன் தமது "இரகசியத்தின் நோக்கத்தை நிறைவேற்ற எப்படித் தெரிந்து கொண்டார்" என்று, மனுஷர்களைக் காணச் செய்வதுதான்.[4] 1:18ல், எபேசியர்களின் அறிவூட்டலுக்காக பவுல் ஜெபித்திருந்தார். இங்கே, அந்த ஜெபம் தேவனால் தனது ஊழியத்தின் மூலமாய் பதிலளிக்கப்பட்டுவிட்டது என்பதையும், தேவனுடைய சத்தியத்தை ஜனங்கள் காணச் செய்ய வேண்டும் என்ற தேவனுடைய நோக்கம் திட்டமிடப்பட்டது என்றும் அவர் காட்டினார்.*

**ஐக்கியம்** *என்பது தேவன் தமது செயல்படுத்தும் முறையைக் குறிக்கிறது (காண்க 1:9, 10). காலங்களின் துவக்கமுதலே, இந்தத் திட்டம் (ஒரு* **இரகசியமாக***) தேவன் ஒரு வெளிப்படுத்தலாக வெளியரங்கமாக்கும் காலம் வரை மறைக்கப்பட்டிருந்தது.* **எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன்** *என்ற குறிப்பு, உலகத்தை சிருஷ்டித்த தேவன், தாமே மனிதனுக்கென்று ஒரு*

*திட்டத்தையும் நோக்கத்தையும் சிருஷ்டித்தார் என்று தமது வாசகர்களுக்கு நினைப்பூட்டினார். இந்த திட்டம் அவரது கடந்தகால நித்தியத்தில் இருந்து அவரது சிந்தையில் இருந்தது (காண்க 3:6; கொலோசெயர் 1:26, 27).*

## தேவனுடைய நித்திய நோக்கத்தின் நிறைவேற்றம் *(3:9, 12)*

***[9]தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, [12]அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.***

***வசனம் 9. அநாதித்தீர்மானம்*** *என்பது கிரேக்க வார்த்தையான prothesin tōn aiōnōn, என்பதன் மொழிபெயர்ப்பு, இதன் பொருள் நேரடிப்பதத்தில் "காலங்களின் நோக்கங்கள்" என்பதாகும். ஆகிலும், தேவனுடைய தீர்மானம் காலங்களினூடே கடந்து செல்லும் நோக்கங்களல்ல; அது அதற்கு முன்பு காலங்காலமாக இருந்த ஒன்று, "அநாதி" என்பது ஒரு நல்ல மொழியாக்கம். பவுல் இதே கருத்தை கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் "உலகத் தோற்றத்துக்கு முன்பே" தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று பேசினார் அல்லது "காலங்கள் நிறைவேறுவதற்கு முன்" (1:4). மேலும் பவுல் தேவனுடைய அநாதி தீர்மானத்தின் நோக்கத்தை "தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தின் ... என்று குறிப்பிட்டார்" (3:11). பவுல் தனது பிற நிருபங்களில் நித்தியத்தை (அநாதி எனும் பதத்தை) "ஆதிகாலங்கள்" என்று குறிப்பிட்டுப் பேசினார் (ரோமர் 16:25), "தீர்மானத்தின்படி ஆதிகாலமுதல்" (2 தீமோத்தேயு 1:9) மற்றும் "ஆதிகாலமுதல்" (தீத்து 1:3) என்று குறிப்பிட்டார்.*

***கொண்டிருந்த*** *என்பது ஏதோ ஒன்றை அடைந்து விட்டதைக் குறிக்கிறது, மேலும் பவுல் சொல்லும் போது தேவனுடைய அநாதி தீர்மானம்* ***கிறிஸ்து இயேசுவுக்குள்*** *நிறைவேறியது என்றார். இருப்பினும், கிறிஸ்துவுக்குள் தேவன் "கொண்டிருந்த" காரியம் சபையால் அறியப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள்ளாக தேவனுக்கு அநாதித் தீர்மானம் இருந்திருக்குமேயாகில் அது சபையால் தெரிய வரவேண்டும் என்று சொல்லும் போது, சபையும் தேவனுடைய நித்திய நோக்கத்தில் (அநாதி தீர்மானத்தில்) இருந்திருக்க வேண்டும். எனவே சபையானது பின்னதாகத் தோன்றிய ஒரு கருத்தோ அல்லது திடீரென தோன்றிய சிந்தையோ அல்ல. சில மதப் போதகர்கள் நம்மிடத்தில் இயேசு உலகத்தில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கத்தான் வந்தார் ஆகிலும் இராஜ்யத்தை ஸ்தாபித்ததை தள்ளி வைத்து விட்டு, அதற்குப் பதிலாக சபையை ஸ்தாபித்தார் என்று சொல்லுவார்கள், ஏனெனில் யூதர்கள் அவரை புறக்கணித்துவிட்டார்கள் என்பார்கள். இவர்களுடைய கண்ணோட்டத்தின்படி, இயேசு "பரலோகத்துக்கு திரும்பப் போய், தமது ஊழியத்தில் தவறியதால், மீண்டும் ஒருமுறை வந்து தாம் முதல் முறை செய்ய நினைத்த காரியத்தை நிறைவேற்றுவார் என்கின்றனர்."[5] அவரது முதல் முறை முயற்சி தவறியிருக்குமானால் அவரது இரண்டாம் முறை முயற்சி மட்டும் வெற்றியைத் தரும் என்பதற்கு என்ன உறுதியைக் கொடுக்க முடியும்?*

இல்லை, சபை வேறெந்த ஒரு காரியத்துக்கும் பதிலாக ஸ்தாபிக்கப்பட்டதல்ல; சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தில் இருந்த ஒன்று என்று பவுல் உறுதியாகச் சொன்னார்.

வேதாகம மாணவர்கள் "இராஜ்யமானது" "தேவனுடைய சட்டத்தின் ... கிறிஸ்துவாகிய நபரில் ஒரு நிழலுலகம்," மற்றும் "கிறிஸ்துவால் கிறிஸ்துவுக்கென்று" இவ்வுலகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களே[6] "சபை" என அறிந்திருக்கக் கூடும். தேவனுடைய இராஜ்யமும் கிறிஸ்துவின் சபையும் ஒரே அங்கத்தினர்களின் கூட்டம்தான்; இப்பொருளில், "இராஜ்யமும்" "சபையும்" ஒன்றே.

**வசனம் 12.** "கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தைக்" குறித்து பவுல் குறிப்பிட்ட போது. அவர் உடனடியாக கிறிஸ்துவுக்குள் இருக்கும் யூதர்களுக்கும் புற ஜாதிகளுக்கும் உரிய சிலாக்கியங்களைக் குறித்து நினைத்துப் பார்க்கிறார். அவரைப் பற்றும் **விசுவாசத்தால் அவருக்குள் நமக்கு தைரியமும் திட நம்பிக்கையும்** கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கிற சிலாக்கியங்களில் ஒன்று. Andrew T. Lincoln என்பவர் குறிப்பிடுகையில் "தைரியம்" மற்றும் "சிலாக்கியம்" என்பவைகளின் கிரேக்க வார்த்தைகள் அடுத்து வரும் துணைச் சொல்லாக ஒரே வார்த்தையில் தொகுக்கப்பட்டுள்ளது ஆதலால் அதை சரியான வலியுறுத்தலில் தைரியமான சிலாக்கியம் என்ற கருத்தாகக் குறிப்பிடலாம் என்றார்.[7] அவர் "நம்பிக்கையை" ஆணித்தரமாகக் குறிப்பிட்டு (நேரடிப் பொருளில், "நம்பிக்கையில்") இந்தக் கருத்துக்கு ஆதாரமாக, வசனப் பகுதியை "நம்பிக்கையின் தைரியமான சிலாக்கியம்" எனக் காட்டுகிறார்.[8]

*Parrēsia* என்ற வார்த்தை, 6:19ல் காணப்படுகிறது மேலும் 6:10ல் வேறொரு வடிவத்தில் காணப்படுகிறது, இது கிரேக்கப் பெயர்ச் சொல்லில் "தைரியம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் பொருள் "பேசுகிறதில் சுதந்தரமும் யதார்த்தமும் உடையவராய் கபடமும் (உட்படுத்தாத) பயமுமற்ற தன்மையும் கொண்டிருப்பது."[9] கிறிஸ்தவர்களுக்கு இந்த "தைரியம்" "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) கொண்டிருக்கும் விசுவாசத்தால்" வருவது. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால், தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தினிமித்தம் நாம் பயப்படவோ வெட்கமடையவோ தேவையில்லை என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவினிமித்தம் அவர் அனுக்கிரகத்தை நமக்கு அளித்திருக்கிறார்.

*Pepoithēsis,* என்பது "நம்பிக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, புதிய ஏற்பாட்டில் இது பவுலால் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது, இந்த வசனப்பகுதியோடு கூடுதலாக, இன்னும் ஐந்து இடங்களில் காணப்படுகிறது (2 கொரிந்தியர் 1:15; 3:4; 8:22; 10:2; பிலிப்பியர் 3:4). அப்படிப்பட்ட நம்பிக்கை எபிரெயர் 4:15, 16லும் 10:19-22லும் சொல்லப்பட்டுள்ளது. முந்தின வசனப்பகுதியில், எபிரெயருக்கு எழுதின எழுத்தாளர் கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராயிருக்கிறார் என்றும், நம்மைப் போலவே அவரும் சோதிக்கப்பட்டவராதலால் நமக்காக பரிதபிக்கக் கூடியவராயிருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். பிறகு அவர், "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத் தண்டையிலே சேரக் கடவோம்" என்று சொன்னார். பின்னதான

*வசனப்பகுதியில், நாம் தேவனிடத்தில் பூரண நிச்சயத்துடன் சேர முடியும் என எழுத்தாளர் வலியுறுத்துகிறார் ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்பதற்கான தைரியம் கொடுக்கப்பட்டிருக்கிறது, கிறிஸ்து நமது பிரதான ஆசாரியனாயிருக்கிறார், நாம் துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் இருக்கிறோம்.*

## *சோர்ந்து போகாதிருக்க ஊக்கமளித்தல் (3:13)*

***[13]ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அனுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன், அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே.***

*__வசனம் 13.__ 3:1-12ல் அடுத்த வாக்கியம் பவுல் விவாதித்த தேவனுடைய இரகசியத்தில் அவருடைய ஸ்தானம் என்ன என்பதுடன் முடிவுறுகிறது. இந்த அறிவுரை தேவையாயிருந்தது, ஏனெனில் தனது சிறைக்காவல் உட்பட இந்த நிருபத்தை எழுதும்போது பவுல் பட்ட உபத்திரவங்களும் அவற்றை அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றும் பொருட்டு சகித்துக் கொண்டிருந்திருக்கிறார். புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும், பவுலின் ஊழியம், அவருக்குக் கடினமான சூழலை ஏற்படுத்தியது (காண்க 2 கொரிந்தியர் 11:23-28). அவர் எபேசியர்கள் சோர்ந்து போக விரும்பவில்லை, தான் சந்தித்த __உபத்திரவங்களையும்__ பாடுகளையும் அவைகளை அவர் சகித்துக் கொண்டதையும் பார்த்து சோர்வடையவோ __மனது உடைந்து__ போகவோ விரும்பவில்லை. ஆதலால், பவுல் தமது வாசகர்களுக்கு நினைப்பூட்டி தனது பாடுகளெல்லாம் (அவர்களுடைய) __மகிமைக்காகவே__ என்று சொன்னார். பவுலுடைய பாடுகளினாலே மற்றவர்கள் நன்மைகளைப் பெற்றார்கள், அவர்கள் இரட்சிப்பையும் பரலோகத்திற்கான நம்பிக்கையையும் பெற்றார்கள். பவுல் தாமே விளக்கமளித்து: "ஆதலால், நாங்கள் உபத்திரவப் பட்டால் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும் ..." (2 கொரிந்தியர் 1:6); "இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது" (2 கொரிந்தியர் 4:12); "ஆகையால், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான* இரட்சிப்பை நித்திய மகிமையோடே *பெற்றுக் கொள்ளும்படிக்கு, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாக சகிக்கிறேன்" என்றார் (2 தீமோத்தேயு 2:10; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).*

## *மேலும் கற்றுக்கொள்ள: "துரைத்தனங்களும் அதிகாரங்களும்" (3:10)*

*"துரைத்தனங்கள் (archē)" மற்றும் "அதிகாரங்கள் (exousia)" ஆகியவற்றை எப்படி பவுல் தனது எழுத்துக்களில் பயன்படுத்தினார்? எபேசியரில் அவர் "எல்லாத்துரைத்தனத்துக்கும் [archēs]" "அதிகாரத்துக்கும் [exousias]" மேலாக கிறிஸ்து மேலாக உயர்த்தப்பட்டார் என்று சொன்னார் (எபேசியர் 1:20).*

மேலும் கிறிஸ்தவனின் போராட்டம் "துரைத்தனங்களோடும் [*archai*]" "அதி காரங்களோடும் [*exousiai*]" உண்டு என்று சொல்லப்பட்டது (எபேசியர் 6:12). கொலோசெயரில் கிறிஸ்து "துரைத்தனங்களும் [*archai*]" "அதி காரங்களும் [*exousias*]" உட்பட சகலத்தையும் சிருஷ்டித்தார் என்று பவுல் சொன்னார் (கொலோசெயர் 1:16); சகல "துரைத்தனங்களுக்கும் [*archas*]" "அதிகாரத்துக்கும் [*exousias*]" கிறிஸ்து தலையாயிருக்கிறார் (கொலோசெயர் 2:10). "துரைத்தனங்களையும் [*archas*]" "அதிகாரங்களையும் [*exousias*]" சிலுவையில் உரிந்து கொண்டார் (கொலோசெயர் 2:15). தீத்து 3:1ல் பவுல் தீத்துவிடம் "துரைத்தனங்களுக்கும் [*archais*]," "அதிகாரங்களுக்கும் [*exousiais*]" கீழ்ப்படிந்திருக்கும்படி ஜனங்களை நினைப்பூட்டச் சொல்லுகிறார்.

எபேசியரின் வசனப்பகுதியில் "துரைத்தனங்களும்" "அதிகாரங்களும்" என்பதுடன் "உன்னதங்களில்" என்று சொல்லப்படுவதால் (காண்க 1:3), இவை ஆவிக்குரிய மண்டலங்களையே குறிக்கின்றன. இருப்பினும் தீத்துவின் வசனப்பகுதியில் "உன்னதங்களில்" என்பது விடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நாம் என்ன முடிவைப் பெறமுடியும்? தீத்து 3:1 நாடுகளின் அரசாங்கங்களைக் குறிப்பிடுகிறது, மற்றும் கிறிஸ்தவர்கள் நாட்டின் ஆளும் அதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. கொலோசெயர் 1:16 கிறிஸ்து அதிகாரிகளையும் துரைத்தனங்களையும் சிருஷ்டித்தார் என்கிறது. சிருஷ்டிக்கப்பட்ட எல்லாம் "மிகவும் நன்றாயிருக்கிறது" என்று சொல்லப்படுவதால் (ஆதியாகமம் 1:31), சிருஷ்டிக்கப்பட்டவைகள் எவைகளோ அவைகள் நல்லவைகளேயன்றி தீமையானவைகள் அல்ல. தீமையானவைகளின் ஆரம்பம் சிறப்பாக விளக்கப்பட வேண்டுமானால் நல்லவைகளே தீயவைகளாக மாறின என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய நல்ல தேவன் சாத்தானையும் இப்போதிருக்கிற நிலையில் சிருஷ்டிக்கவில்லை தீமை யையும் உலகத்திலே அவர் சிருஷ்டிக்கவில்லை. தீமையின் இயல்பைக் குறித்து ஒரு ஆழமான ஆய்வுக்குப் போகாமலேயே, குறைந்தபட்சம் துரைத்தனங்களும் அதிகாரங்களும் கிறிஸ்துவால் சிருஷ்டிக்கப்பட்ட நிலையில் அவைகளுக்குள் தீமையிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும், கொலோசெயர் 2:15 ல், கிறிஸ்து துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி சிலுவையின் மேல் வெற்றி சிறந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆகையால், இந்த வல்லமைகள் தீமைகளாயிருந்திருக்க வேண்டும். கிறிஸ்து சகல துரைத்தனங்களுக்கும் அதி காரங்களும் மேலானவராக சொல்லப்படுகிறது, ஆனால் இந்த அதிகாரங்கள் நல்லவைகளா தீமைகளா என்று எவ்வித குறிப்பும் கொடுக்கப்படவில்லை (எபேசியர் 1:21). கிறிஸ்தவர்கள் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் பொல்லாத சேனைகளுக்கும் எதிராகப் போராடுகிறார்கள் (எபேசியர் 6:12). எபேசியர் 3:10 ல் பவுல் போதித்தது என்னவெனில் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் - அது தேசங்களை ஆளும் அரசாங்கங்களாக இருந்தாலும், பொல்லாத சேனைகளாயிருந்தாலும் - இந்த உலகத்தில் தேவனுடைய திட்டமும் நோக்கமும் சபையின் மூலமாய்த் தெரிய வர வேண்டும். இதை சபை எப்படி செய்யமுடியும்? சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் போது, பரலோகமும் பூமியும், தீமையும் நன்மையும், இயற்கையான உலகமும் ஆவிக்குரிய உலகமும், சாத்தானும் அவருடைய தூதர்களும் கூட, தேவனுடைய ஞானம்

*கிரியை செய்வதைப் பார்ப்பார்கள். பாவம் நிறைந்த இந்த உலகில் இழந்து போனவர்கள் கண்டுபிடிக்கப்படுவதும் பாவிகள் இரட்சிக்கப்படுவதுமே தேவனுடைய கிரியைக்கும் ஞானத்துக்கும் ஆதாரம்.*

## *பயன்பாடு*

***இரகசியம் விளக்கப்படுத்தப்படுதல் (3:1-13)***

*நெப்போலியன் போனபார்ட்டின் பெயர் பரவலாக அறியப்பட்ட ஒன்று, அவன்தான் ஐரோப்பியாவை ஜெயிக்கப் போகிறவன் என்று எதிர்பார்க்கப்பட்டான். ஜனங்களில் அநேகருக்கு அவன் கலைக்கும் அறிவியலுக்கும் முன் மாதிரியானவன் என்று தெரியாது, ஆனால் அவன் அப்படியிருந்தான், 1798 ஜூலையில் நெப்போலியன் எகிப்தைப் பிடிக்கத் துவங்கினான், ஆகிலும் 1801 செப்டம்பரில் நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டான். அவனுடைய அரசியல் திட்டம் மற்றும் அவனுடைய இராணுவத்தைப் பொறுத்த மட்டில் அவனுக்கு அந்த மூன்று வருடம் தோல்வியே மிஞ்சியது, ஆகிலும் அவனுக்கு அந்த வருஷங்களில் ஆர்வமூட்டிய பெரிதான விஷயம் ஒன்றின் மூலம் வெற்றிகரமான வருஷங்களாயின - அது தொல்பொருள் ஆராய்ச்சி. 1799 ஆகஸ்ட் மாதத்தில், நெப்போலியனின் இராணுவத்தில் இருந்த ஒரு தளபதி* Pierre-François Bouchard, *இப்போது பிரசித்திபெற்ற* Rosetta *கல்லை நைல் நதியின் டெல்டா ஓரங்களில் கண்டு பிடித்தான். இந்தத் கல்லில், மூன்று பழங்கால மொழிகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், எகிப்தின் சித்திர எழுத்து வல்லுனர்களுக்கு அதின் இரகசியத்தை உடைக்கவும் புரிந்து கொள்ளவும் தக்க திறவு கோலாய் அமைந்தது. இந்த ஒரு கல் இன்றைய நாகரீக எகிப்தின் கல்விக்குரிய கதவைத் திறந்து வைத்தது.*

*எபேசியரில் விளக்கப்படும் அந்த "இரகசியம்" (பரிசுத்த அந்தரங்கம்) தேவனுடைய* Rosetta *கல்லாக இருக்கிறது. அதுவே பழைய ஏற்பாட்டில் தேவன் செய்த வாக்குத்தத்தத்தைப் புரிந்து கொள்ளச் செய்யவும், சுவிசேஷங்களில் கிறிஸ்து செய்தவைகளையும், இப்பொழுது சபை என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதையும் புரியச் செய்யும் திறவுகோல் அது. வேதாகம இரகசியம் ஒரு கருகலானதோ அறியப்படாததோ அல்ல என்பதை நினைவில் வையுங்கள். மாறாக, அது ஒரு காலத்தில் தேவனுக்கு மட்டுமே தெரிந்திருந்த ஒன்று, இப்போழுது ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளச் செய்யும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெளியாக்கப்பட்ட இரகசியம் ஒரு வரலாறாக பொருள்படுத்தப்படுகிறது.*

*எபேசியர் 3:1-13 தேவனுடைய இரகசியத்தின் அநேகப் படிமானங்களை வெளிப்படுத்துகிறது. அதை இப்பொழுது எல்லா ஜனங்களும் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.*

*<u>இரகசியத்தை விளக்கப்படுத்தியது யார்?</u> (3:1, 2, 7). "இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன் - " (3:1). தேவன் தமது இரகசியத்தை வெளிப்படுத்த ஒரு மனிதனை தெரிவு செய்வதன் மூலம் செயல்படுத்தினார். தேவன் மனுஷர்கள் மூலமாய் கிரியை செய்கிறார். ஏதாவது ஒரு சபை வளருமானால் அது தன்னிலுள்ள ஜனங்களை பயன்படுத்துகிறதினால்*

தான்.

தேவன் தமது சித்தத்தை செயல்படுத்த பயன்படுத்தியவர்களில் ஒருவர் பவுல். ஒப்புக் கொடுத்தவர், ஜெபம் நிறைந்தவர், சோர்வடையாதவர், மற்றும் ஆவியானவரால் நடத்தப்பட்டவர், அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு சரீரத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தும்படி பயன்படுத்தப்பட்டார்.

பவுல் தன்னை *"கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவன்"* என்று *சொல்லுகிறார்* (3:1). அவர் ரோமாபுரி சிறையில் காவல் வைக்கப்பட்டு நீரோவின் விசாரணைக்காகக் காத்துக் கொண்டிருப்பதாக எழுதினார். அவர் தப்பிப்போய் விடாதபடிக்கு ரோமசேவகர்கள் இரவும் பகலுமாய் சங்கிலியால் கட்டி காவல் காத்தனர். பவுல் அங்கே ஏறக்குறைய மூன்றாண்டு காலம் இருந்து விட்டார். ஒருமுறை கூட அவர் தன்னை "நீரோவினிமித்தம் கட்டுண்டவன்" என்று சொல்லவில்லை! அவர் தம் எல்லா நிருபங்களிலும் தன்னை "கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவன்" என்றே சொல்லிக் கொண்டார்.

பவுல் பாடுபட்ட அனைத்து காரியங்களிலும், அவர் நேரடியாக இயேசுவோடு சம்பந்தப்படுத்தினார். கலாத்தியரில் கடைசி வசனத்துக்கு முந்தின வசனத்தில், பவுல் தான் பெற்ற வாரின் அடிகளையும், கல்லெறியுண்டவைகளையும், அடிகளையும் திரும்பிப் பார்க்கிறார். "கல்லடிகளையும், சவுக்கடிகளையும், தடியடிகளையும் என் சரீரத்திலே அச்சடையாளமாக தரித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லவில்லை. மாறாக, அவர், "இயேசுவின் அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார் (கலாத்தியர் 6:17). நமது சூழ்நிலைகளை நாம் எப்படி கண்ணோக்குகிறோம் என்பதே வித்தியாசங்களை ஏற்படுத்துகின்றன!

பவுல் தன்னுடைய சூழ்நிலைகளைப்பார்த்த போது, அது எவ்வளவு கடினமானதாயிருந்தாலும் அல்லது சோதனையாக இருந்தாலும், அது தேவனுடைய மகிமைக்காகவே நடப்பதாகப் பார்த்தார். அவர் கிறிஸ்துவினிமித்தம் கட்டுண்டவராய் புறஜாதிகளுக்கு தேவனுடைய இரகசியத்தை அறிவிக்கும் நோக்கத்தை நிறைவேற்றினார்.

"அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்" (3:2). *பவுல் சொன்னதன் பொருள் அவர் தான் ஒரு உக்கிராணக்காரன் என்பதுதான்.* வேறொருவருக்குரிய ஆஸ்திகளின் மேலாண்மைக்கு பொறுப்பு ஒப்படைக்கப் பட்டவர். இந்த விஷயத்தில் தேவனுடைய வியத்தகு இரகசியத்தின் உக்கிராணத்துவம் தனக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்.

"தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்டவராகிய அவருடைய கிருபையினாலே இந்த சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன்" (3:7). *தேவனுடைய செய்தியை மற்றவருக்கு அறிவிக்கும் ஒருவருடைய குணாதிசயம் ஒரு ஊழியக்காரனுக்குரியதாயிருக்க வேண்டும்.* எந்தப் பிரசங்கியாயிருந்தாலும் தனக்கே பேர் உண்டாக்கிக் கொள்ளும் இலக்கோடு செயல்படுபவர்களின் ஊழியம் தேவனால் ஆசீர்வாதம் பெற்றதாயிருக்க முடியாது. மற்றவர்கள் தன்னையே நோக்கிப் பார்த்து தன்னையே பின்பற்றிவர வேண்டும் என்று விரும்புகிற எந்தப் பிரசங்கியாரும் உண்மை அடையாளத்தைத்

தொலைத்துவிட்டனர் என்று பொருள். பெரிய பிரசங்கங்களுக்கு சுய மேட்டிமையும் கர்வமும் எதிரி. தன்னை ஒரு ஊழியக்காரனாய்ப் பார்ப்பவன் மட்டுமே பிரங்கித்தலும் அல்லது ஊழியம் செய்தலும் ஆகியவற்றில் ஒரு பலமுள்ள ஊழியத்தை செய்யக் கூடும்.

*இரகசியத்தின் சாராம்ஸம் என்ன? (3:3, 8).* "அதென்னவெனில், புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய் ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய் கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்கள்" என்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார் (3:3) முன்பு பவுல் தெய்வீக இரகசியத்தில் இருப்பவைகளை குறிப்பிட்டிருந்தார், ஆகிலும் இங்கு வசனம் 3ல் அவர் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறார். புறஜாதிகள் ஒரே சரீரத்திற்குள்ளாக யூதர்களோடு ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளனர். இயேசு தமது வெளிப்படையான ஊழியத்தின்போது, இந்த மாபெரும் இரகசியத்தை குறிப்பால் உணர்த்தினார்: "இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குப் பதில் கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவான் 10:16).

இரகசியம் மூன்று உண்மைகளை தனக்குள் கொண்டிருக்கிறது: புறஜாதிகளும் தேவன் யூதர்களுக்கு அளித்துள்ள அதே சுதந்தரத்தைப் பெற சுதந்தரவாளிகளாக்கப்பட்டுள்ளனர். யூத அங்கத்தினர்களுடன் புறஜாதிகளும் சமமாக நிற்க ஏதுவான உடன் அங்கத்தினர்களாயிருக்கின்றனர், மேலும் யூதர்களோடேகூட புறஜாதிகளும் வாக்குத்தத்தங்களுக்கு முழுமையான பங்குள்ளவர்களாயிருக்கின்றனர். இது நடக்கும் என்று யூதர்கள் ஒரு போதும் நினைத்துப் பார்க்கவில்லை. புறஜாதிகளுக்கு அப்படி ஒரு ஆசீர்வாதங்கள் அளிக்கப்படும் என்று அவர்கள் கனவில் கூட கண்டிருக்க மாட்டார்கள். அது தேவனுடைய கடந்த கால இரகசியமாயிருந்தது, ஒரு காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்து பிறகு வெளியானது.

இது எப்படி சாத்தியம்? புறஜாதிகள் எப்படி உடன் சுதந்தரவாளிகளாய், இணை அங்கத்தினர்களாய், உடன் பங்காளிகளாயிருக்க முடியும்? "அது சுவிசேஷத்தினாலே சாத்தியமாயிற்று" என்று பவுல் சொன்னார். சுவிசேஷம் என்பது இயேசு கிறிஸ்து மரித்து எல்லா ஜனங்களுக்காகவும் மறுபடியும் எழுப்பப்பட்டார் என்கிற நற்செய்தி. தேவனுடைய வெளியரங்கமான இரகசியம் என்பது தேவன் சிலுவையிலே பகைமையாக நின்ற நடுச்சுவரைத் தகர்த்து தமக்குள்ளே இரு திறத்தாரையும் ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்தார். அங்கே யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமை யென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை. அது தேவனுடைய கடந்தகால அநாதித் தீர்மானத்தில் இருந்தது. சபை ஒரு திடீர் தோற்றமல்ல; அது தேவனுடைய கடைசி நேர கருத்துமல்ல. உலகத் தோற்றத்துக்கு முன்னே நமது மீட்பின் திட்டத்தை வரையறுப்பதிலும், ஜனங்களெல்லாரும் எந்த ஒரு குறிப்பிட்ட பாகுபாடுமின்றி ஒரே சரீரமாக நிர்மானிக்கும் காரியத்திலும் அது தேவனுடைய நித்திய இரகசியமாயிருந்தது.

புதிய உறவுமுறையை பவுல் விஸ்தாரமாகப் பேசி,

"பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்த கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார் (3:8). இந்த "ஐசுவரியங்கள்" யாவை? பவுலின் எழுத்துக்களிலிருந்து, தேவன் அன்பிலே ஐசுவரியமுள்ளவர், சகிப்புத்தன்மையிலே ஐசுவரியமுள்ளவர், பொறுமையிலே ஐசுவரியமுள்ளவர், மகிமையிலே ஐசுவரியமுள்ளவர், ஞானத்திலே ஐசுவரியமுள்ளவர், அறிவிலே ஐசுவரியமுள்ளவர், இரக்கத்திலே ஐசுவரியமுள்ளவர், கிருபையிலே ஐசுவரியமுள்ளவர், பாவத்தை மன்னிக்கிறதிலே ஐசுவரியமுள்ளவர்.

இந்த ஆசீர்வாதங்களை நாம் கிறிஸ்துவுக்குள் பெற்றிருக்கிறோம். அவருக்குள் தேவன் நம்மை ஆவிக்குரிய கோடீஸ்வரர்களாக்கியிருக்கிறார்! நமக்கு அளவற்ற ஆஸ்திகள் இருக்கிறது, நாம் யூதராயினும் புறஜாதியாயினும் இது உண்மை.

*இரகசியத்தை வெளியரங்கமாக்குவதில் தேவனுடைய நோக்கமென்ன?* (3:9, 10). அவர் தமது பரிசுத்த இரகசி யத்தை தெரியச் செய்ததன் விளைவாக, அதாவது கிறிஸ்துவின் சரீரமாகிய இரகசியம் வெளிப்பட்டதன் விளைவாக, கீழ்வரும் காரியங்கள் சம்பவிக்கவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாயிருந்தது:

> தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதித் தீர்மானத்தின்படியே உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அனந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக (3:9, 10).

தேவன் சபையை ஏன் நிலைப்படுத்தினார்? "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் உன்னதங்களில்" அவருடைய அனந்த ஞானமானது தெரியவரும் பொருட்டு செய்யப்பட்டது.

இந்தத்துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் நாம் போதிப்பது என்ன? நாம் தேவனுடைய அனந்த ஞானத்தைப் போதிக்கிறோம். நாம் நமது வாழ்க்கையின் மூலமாக தேவன் எப்படி பாவமுள்ள, கலகக்காரனை, பிடிவாதமுள்ள மனித வர்க்கமாகிய நம்மை மன்னித்து அவர்தம் பரிசுத்தத்தின் உண்மையோடு ஒத்துப்போகாமலேயே முற்றிலும் மன்னித்தார் என்பதைக் காட்டுவதால் போதிக்கிறோம். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து, பாவத்தை வெறுத்து, வித்தியாசப்பட்ட பின்னணியுடையவர்களாயிருந்தாலும் ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொண்டவர்களாய் விளங்கப் பண்ணுகிறோம்.

சபையின் மூலமாக மட்டுமே இந்த துரைத்தனங்களும் அதிகாரங்களும் தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் கற்றுக்கொள்ள முடியும். சபையின் மூலமாக மட்டுமே தேவனுடைய அன்பை அவர்கள் அறிந்து கொள்ள முடியும். சபையின் மூலமாக மட்டுமே தேவனுடைய மன்னிப்பின் திராணியின் விஸ்தாரத்தைக் கண்டு பிடிக்க முடியும்.

நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள உறவுமுறைகளும் ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவு முறைகளும் தேவனுடைய ஞானத்தை பிரதிபலிக்கின்றன. முழுமுற்றிலும், நாம் தேவனுடைய ஜனங்களாய் இருப்பதன் மூலம் ஆவிக்குரிய ரீதியில் பிளவுபட்டுள்ள உலகத்தை மீட்கும் ஐசுவரியமுள்ள அவருடைய ஞானத்தை விளங்கப் பண்ணுகிறோம்.

*இரகசியத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன? (3:12).* "அவருடைய பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" (3:12). கிறிஸ்து மூலமாக ஒரே சரீரமாக்க தேவன் செயல்பட்டதினால், தேவனிடத்தில் சேரும் ஆயத்த சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நமக்கும் தேவனுக்குமிடையில் இருந்த நடுச்சுவரை கல்வாரியில் நீக்கினதால், நாம் சுதந்தரமாகவும் நம்பிக்கையோடும் அவரிடத்தில் சேரமுடியும்.

நம்முடைய ஐக்கியத்தை அவர் ஆர்வமுடன் அனுபவிப்பதால் தேவன் நம்மீது அன்புகூர்ந்து நமக்கு செவிசாய்க்கவும் விரும்புகிறார். அகிலத்தையும் சிருஷ்டித்தவரால் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படுகிறார் என்று அறிந்து கொள்வதைக் காட்டிலும் பெரிதான ஆசீர்வாதம், அதுவும் அவர்களோடும் அவர் எப்போதும் ஐக்கியத்தில் இருக்கிறார் என்பதைக் காட்டிலும் வேறெதுவும் இருக்க முடியுமா?

*முடிவுரை.* தேவன் தமது இரட்சிப்பின் செய்தி எங்குமுள்ள எல்லா மனுஷருக்கும் தெரியப்பண்ணப்பட வேண்டும் என்று விரும்புகிறார். செயல் முறையில் வரும்போது, ஆண்களும் பெண்களும் மறுரூபமாக்கப்படுவார்கள் மேலும் தேவன் இப்பொழுதும் எப்பொழுதும் மகிமைப்படுவார்.

**கிறிஸ்துவின்மேல் ஒருமுகப்படுத்துதல்**

Arturo Toscanini *(1867-1957)* என்பவர் உலக அளவில் இசை நிகழ்ச்சி நடத்தும் மிகப் பெரிய நடத்துனர்களில் ஒருவர். ஒருமுறை அவர் லுட்விக் வேன் பீதோவன் என்பவரை வைத்து ஒரு இன்னிசை நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்த போது, டோஸ்கானினி "நானும் ஒன்றுமில்லை; நீங்களும் ஒன்றுமில்லை எல்லாமே பீத்தோவனே" என்று சொன்னார். அவர் தன்னுடைய பொறுப்பு மக்களை தன் பக்கம் ஈர்ப்பதாக இல்லாமல் திறமைசாலியான பீத்தோவன் பக்கமாக ஈர்க்கப்பட வேண்டும் என்று புரிந்து கொண்டிருந்தார்.

பவுல் புரிந்து கொண்டிருந்தார், நாமும் கூட புரிந்து கொள்ள வேண்டும், தேவனுடைய கிருபையை அறிவிப்பது நமது பொறுப்பு ஆனால் அது மற்றவர்களை நமக்கு சார்பாக ஈர்ப்பதாக இல்லாமல், கிறிஸ்துவின் செய்தியின் மீது ஒருமுகப்படுத்தச் செய்ய வேண்டும். நாம் ஒன்றுமில்லை; கிறிஸ்து எல்லாமாக இருக்கிறார். பவுல் கொரிந்தியர்களுக்கு நினைப்பூட்டி, "அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை; விளையச் செய்கிற தேவனால் எல்லாமாகும்" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 3:7). நாம் பிரசங்கமேடையிலிருந்து போதித்தாலும் சரி, அல்லது ஒருவருக்கு - ஒருவர் என்ற ரீதியில் அயலாருக்குப் போதித்தாலும் சரி, நம்முடைய எண்ணங்களெல்லாம் கிறிஸ்துவிடம் ஒருமுகப்படுத்தப்பட்டதாயிருக்க வேண்டும்.

**உறுதியான (பக்தி) மார்க்கம்**

நாம் "அப்படித்தான் நம்புகிறோம்" என்ற அடிப்படையில் மார்க்கத்தை அறிவிப்பதில்லை. நமது புத்திக்கெட்டாத, அளவற்ற தேவனுடைய ஐசுவரியத்தை அழிவுண்ட மனித வர்க்கத்துக்கு அறிவிக்கிறோம். 3:20ல் பவுல் தேவனைக் குறித்து, "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய

*வல்லவராகிய அவருக்கு" என்று பேசினார்.*

கிறிஸ் புல்லார்டு

---

குறிப்புகள்

[1]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 184. [2]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 84. [3]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:309. [4]Lincoln, 184. [5]*இந்தக் கருத்து ஆயிர வருட அரசாட்சியை ஏற்றுக் கொள்ள வைக்கும் அடிப்படை, அநேக பிரிவு கூட்டத்தார்களும் கிறிஸ்துவின் ராஜ்யம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லையென்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அந்த ஆட்சி வரும் என்று போதிக்கின்றனர். இந்தக் கருத்து மாற்கு 9:1 மற்றும் கொலோசெயர் 1:13, 14 போன்ற வசனங்களை மறுதலிக்கிறது.* (Foy E. Wallace, Jr., *God's Prophetic Word,* rev. ed. [Oklahoma City: Foy E. Wallace, Jr., Publications, 1960], 161.) [6]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 433, 153. [7]Lincoln, 189. *ஒரு கட்டுரைக் கருத்து, சால்மன்ட் (310), உட்பட சில விளக்கவுரையாளர்களால் எதிர்க்கப்பட்டது, ஆகிலும் கிரேக்க மூல வசனப் பகுதியின் சொற்றொடர் ஆதரவளிக்கிறது.* [8]Lincoln, 190. [9]Bullinger, 107.